மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அ & இ : தமிழ் நாட்டில் ஏற்கெனவே 'விலேச்சலுகைத் திட்டம்' ஒன்று செயலில் உள்ளது. உறுப்பினர் அத்திட்டத்தைப் பற்றியே குறிப்பிடுகிருரென நம்புகிறேன். அத்திட்டத்தின் விவரங்கள் அடங்கிய அரசாங்க ஆணையின் நகல் * ஒன்று (தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையில் 1—3—1968-ம் தேதியுள்ள 831-ம் எண் அரசாங்க ஆணை) பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலேவர் அவர்களே, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக, இதர மாநிலங்களிலிருந்து வாங்கும் பொருள்களின் விலேயைவிட 10 சத விதம் அதிகமான விலேயாக இருந்தாலும், நம்முடைய மாநிலத்தினுடைய பொருள்களேயே வாங்கவேண்டும் என்று விதி தரப்பட்டிருக்கிறது. "ப்ரொவைடெட் தி க்வாலிடி ஈஸ் கம்பாரபிள்" என்று அந்த விதிக்கு மட்டும் இருக்கிறது. ஆனல், மற்றவைகளிலே அது இல்லே. இப்பொழுது க்வாலிடி சரியில்லே என்று சொல்லிவிட்டு, வேறு மாநிலங்களிலிருந்து சரக்குகளே அதிக விலே கொடுத்து வாங்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, 'ஸேம் மெடீரியல்' என்று போட்டாலே போதும். அந்த வகையில் திருத்தம் செய்வதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எது எப்படியிருந்தாலும், க்வாலிடிதான் மிக மிக முக்கியம், இந்த மாநிலத்தில் வாங்கினுலும், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கினுலும். ஆகவே, அதை விட்டுவிட்டு வாங்குவது என்று வைத்தால், இந்த மாநிலத்தில் உற்பத்தியாவதையெல்லாம் வாங்கவேண்டும் என்று ஒரே உத்தரவு இட வேண்டியிருக்கும், மற்றவற்றை வாங்குவதற்கே முடியாமல் இருக்கும். ஆகவே, க்வாலிடி அடிப்படையில் தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதனல் கொஞ்சம் விலே அதிகமாகலாம். 10 சத விதம் கூடக் கொடுத்து, இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று அத்தகைய சலுகை தரப்பட்டிருக்கிறது. ஒரே விதமான க்வாலிடி இருந்து, நல்ல க்வாலிடியாக இருந்து, ஆனல் விலே இதைவிடக் குறைவாக இருக்கிறது என்றுல் அதையும் வாங்கலாம், இதையும் வாங்கலாம். அதற்காகத்தான் 10 சத விதம் கூடத் தரலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தளர்த்திவிட்டால், பிறகு பண்டங்கள் வாங்குவதில் பல குறைபாடுகள் ஏற்படும்.

Landing space for fishing boat in Ovari

*69 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is a proposal to acquire vacant sites in Ovari village in Nanguneri taluk, Tirunelveli district to provide landing spaces for the boats of fishermen of the said village?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லே.

---

* 516–519-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1968 ஆகஸ்ட் 21]

திரு. டி. மார்டின் : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், சார். நாங்குனேரி தாலுகாவைச் சேர்ந்த உவரியிலும், திருச்செந்தூர்த் தாலுக்காவைச் சேர்ந்த பெரியதாளை என்ற கிராமத்திலும் அதிகமாக மீன்கள் பிடிக்கிறார்கள். குறிப்பாக. பெரியதாளையில் கடலில் இருக்கக்கூடிய பாறைகளின் காரணமாக, காற்றுக் காலங்களில், திடீரென்று பாறைகளில் படகுகள் மோதுவதன் காரணமாக, மீனவர்களுக்குப் பெருத்த பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. இந்த நிலையை உத்தேசித்து, பெரியதாளையிலும் உவரிப் பகுதியிலும் மீன் பிடிக்கும் கிராமங்களிலே பூண்டியாவது படகுகளை நிறுத்தக்கூடிய அளவுக்கு வசதி செய்து கொடுக்கும் படியாக, நிலங்களை சர்க்கார் நில ஆர்ஜிதச் சட்டத்தின் மூலமாக எடுத்து, மீனவர்களுக்கு வழங்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடல் அரிப்பு ஏற்பட்டதன் விளைவாக, அந்த உவரி என்ற கிராமம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதியை 'நாடார் உவரி' என்றும் வேறு பகுதியை 'பரவர் உவரி' என்றும் குறிப்பிட்டு இந்த நிலங்கள் நாடார் உவரிக்குத்தான் சொந்தம் என்ற நிலையை உருவாக்கிவிட்ட காரணத்தினாலே, முதலாளிகள் வசம் அதனுடைய மேல் பார்வை இருப்பதால், பரதவர் நிவாரண சங்கத்தினர் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து வேறு நிலத்தைக் கேட்டார்கள், பெற்றிருக்கிறார்கள். இதற்குச் சம்பந்தம் இல்லாததால், அந்தப் பிரச்சினையைத்தீர்க்க முடியாத நிலை இருக்கிறது. கனம் அங்கத்தினர் இப்பொழுது குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்றால், அதைப்பற்றித் தனியாகக் கடிதம் எழுதி அனுப்பலாம்.

வேளாண்மை பொறியியல் தொழிலாளர்கள்

* 70 வினா—**திரு. என். மருதாசலம்**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தமிழ்நாடு அரசினர் வேளாண்மை பொறியியல் தொழிலாளர்கள் தங்கள் குறைகளைப்பற்றி 23—7—1967-ம் தேதி சர்க்காருக்கு விண்ணப்பித்து உள்ளார்களா?

(இ) ஆமெனில், அதன்மேல் சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். மருதாசலம்: கோவையிலுள்ள விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தனியார் பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதைவிட குறைவாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆகவே தனியார் பண்ணைகளில் கொடுக்கக்கூடிய கூலியை சர்க்கார் பண்ணைகளிலும் கொடுப்பார்களா? அங்கு வேலை செய்யும் வாச்மேன் போன்றவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க அரசு உத்தேசிக்குமா?